பண்பாட்டலுவல்கள் திணைக்கள சுற்றுநிருபம் : **2020/07**

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
01.01.2020.

சம்பந்தப்பட்டவர்களுக்கு,

## வடமாகாண படைப்பாளிகளிடமிருந்து நூல் கொள்வனவு செய்தல் - 2020

**துறைசார் விடயங்கள்**

**அ) ஆக்க இலக்கியங்கள்:-**

நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, கவிதை, நாடகம்

**ஆ) பண்பாட்டியல் :-**

ஆன்மீகம், நாட்டார்கலை, பண்பாடு, கலைகள் (நடனம், இசை, ஓவியம், சித்திரம், சிற்பம், புகைப்படம் முதலியன)

**இ) ஆய்வு முயற்சிகள் :-**

கல்வி, கலை, சமூகம், மருத்துவம், பண்பாடு, வரலாறு, வணிகம், உளவியல், ஊடகம்

வருடத்திற்கொருமுறை குறித்த திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற நிதியில் படைப்பாளிகளிடமிருந்து ரூபா 5000/- இற்கு நூல்கள் கொள்வனவு செய்யப்படும்.

**நிபந்தனைகள்**

01. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நூல்கள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் வெளியிடப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
02. நூல் கொள்வனவு தொடர்பான கோரிக்கை நூலாசிரியருடையதாக இருத்தல் வேண்டும்
03. எழுத்தாளரின் முதன் நூலாக இருப்பின் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும் இல்லையெனில் நூல் முதற்பதிப்பாக இருத்தல் வேண்டும்.
    மேற்படி விடயங்கள் நூலாசிரியரால் சத்தியக் கடதாசிமூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
04. வெளிமாகாணங்களில் வசிக்கும் வடமாகாணப் படைப்பாளிகள் தமது நிரந்தர வதிவிடத்தை பிரதேச செயலகம் ஊடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.
05. நூல் அச்சுப்பிழையின்றி எழுத்துப்பிழையின்றி சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். குறைந்த பட்சம் GSM 80 அச்சுக்கடதாசியை பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

(கல்வி வெளியீட்டு ஆலோசனைக்குழு, நூலக ஆவண சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரத்தைப் பேணத்தவறும் புத்தகங்கள் நிராகரிக்கப்படும்)

06. சிறுவர் இலக்கிய நூலானது யுனெஸ்கோவின் நிபந்தனைகளுக்கு அமைய பத்து (10) பக்கங்களுக்கு அதிகமாக இருப்பதுடன் ஏனைய நூல்கள் நாற்பத்தொன்பது (49) பக்கங்களுக்கு அதிகமாக இருத்தல் வேணடும்.

07. படைப்பாளிகளிடமிருந்து வெளியீட்டு நூல் ஒன்றிற்கு மட்டும் கொள்வனவு உரித்து வழங்கப்படும்.

08. கட்டுரைத் தொகுப்புக்கள் வார சஞ்சிகைகள் வார வெளியீடுகள், திணைக்கள நிதியனுசரனை பெற்று வெளியீடு செய்த நூல், கல்வெட்டுக்கள் என்பவை விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவையாகும்.

09. பரீட்சை வழிகாட்டி நூல்கள் வினாவிடை நூல்கள் மற்றும் முன்பள்ளி புத்தகங்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவையாக கருதப்படும்.

10. ISBN இலக்கம் நூலில் பதிப்பிக்கப்பட்டிருத்தல் அவசியமானது.

கொள்வனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்படும் மாதிரி நூல்கள் மீள ஒப்படைக்கப்பட மாட்டாது.

மேற்படி நிபந்தனைகளுக்கமைவாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பின்வரும் முகவரிக்கு 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தினை ஒரு நூலுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.

உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப படிவத்தினை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது வட மகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பும் முகவரி :** உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
செம்மணிவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**இணையத்தள முகவரி :** www.np.gov.lk / www.edumin.np.gov.lk

**தொலைபேசி இல. :** 0212054105 / 0213202568

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.